1981 ஏப்ரல் 20]

யில் அவர்கள் உற்பத்திச் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் டன் ஒன்றுக்கு ரூ. 200 முதல் 210 வரை வருகிறது. ஆகவே, அந்த அளவிற்கு விலையை உயர்த்திக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? மேலும் அவர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், மற்றும் உரங்கள் ஆகியவற்றையும் குறைந்த விலையில் கொடுத்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்வியிலே பெரும்பாலான கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கப்பட வேண்டியதாகும். இருந்தாலும் சொல்கிறேன், ரூ. 175 கொடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது தான் உத்தரவிட்டு, அந்த விலை உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக பொது மக்களிடத்தில் இருந்து பங்குப் பணத்தை வசூலித்து, கூட்டுறவு முறையில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

தஞ்சை மாவட்டத்தில் புதிய சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

***வினா எண். 810—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்தில் ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழி பகுதியிலோ ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

[1981 ஏப்ரல் 20

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரம், சீர்காழி பகுதியில் புதிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படு கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரி வித்தார்கள். மாயவரம், குத்தாலம் பகுதியில் கரும்பு அதிக மாக விளைவதால், மாயவரம் பகுதியில், குத்தாலத்திற்கு அருகில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், திருத்தணியில் 1,250 டன் பிழிதிறன் கொண்ட பெரிய சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவவும். 500 டன் பிழிதிறன் கொண்ட சிறிய, சர்க்கரை ஆலை ஒன்றை முறையே தஞ்சை மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் நிறுவ அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தஞ்சைப் பகுதியில் அந்த ஆலையை எங்கே நிறுவலாம் என்பது குறித்த ஆய்வினை அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்த்து, கரும்புப் பயிரிடும் இடங்கள் மற்றும் பல்வேறு வாய்ப்பு கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, தருகின்ற அறிக்கையின். பேரில் முடிவு எடுக்கப்படும். நிச்சயமாக நல்ல இடமாகத் தெரிந்தெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில்—குறிப்பாக மாயவரம் பகுதியில் ஆரம் பிக்க இருக்கும் சர்க்கரை ஆலை எவ்வளவு டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் திறன் உள்ளதாக இருக்கும்? அந்தச் சர்க்கரை ஆலை எந்த ஆண்டு துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்கு ஏறத்தாழ $2\frac{1}{2}$கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அந்த ஆலையை அமைப்பதற்காக ஆய்வு வேலைகளைச் செய்ய இப்போதுதான் அதிகாரிகள் அனுப்ப இருக்கிறோம். ஆய்வுப் பணிகள் வெகு விரைவிலே முடிக்கப்பட்டு திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மதுரை மாவட்டத்தில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அது எங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்படவிருக்கிற சிறிய சர்க்கரை ஆலையை 500 டன் பிழிதிறன் கொண்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செய்வதுதான் செய்கிறோம், பெரிய சர்க்கரை ஆலையாக 1,200 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையாக அமைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்தில் தனியார் துறையில் ஒன்றும், அரசுத் துறையில் ஒன்றுமாக இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மேலும் 1,200 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை நிறுவினால் ஏற்கெனவே இருக்கிற ஆலைகளுக்குக் கரும்பு கிடைக்காமல் அவைகளின் வேலைகள் பாதிக்கும் என்று அவர்களுடைய சங்கத்தின் மூலமாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல், அரசின் எண்ணமும் நிறைவேறுகின்ற வகையில் சிறிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்கும் நோக்கத்துடன் அங்கே 500 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையைத் தொடங்க இருக்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 811—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தை காஞ்சீபுரத்திற்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை உள்ளதா ?

(ஆ) இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?